**பருத்தித்துறை நகர சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 26 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 11 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பருத்தித்துறை நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | நகர சபைகள் கட்டளைச்சட்டம் பாகம் VI இன் பிரிவு 157 இன் 6(எ) ஆம் இலக்கம் | 80,450 | அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக வருமானப் பரிசோதகரினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | நகர சபைகள் நிதி விதிகள் | | |
| (i) | அத்தியாயம் III இன் பிரிவு 54(1) | | மீளாய்வாண்டிற்கான வீதவரி சம்பந்தமாக வீதவரி அட்டவணை நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் செயலாளரிடம் கையளிக்கப்பட்டு திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 54(2) | 1,079,108 | மன்றக்காணி வாடகை அறவீடுகள் உரிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | |
| | நிதி ஒழுங்கு விதி 1646 | | மீளாய்வாண்டிற்கான ஒவ்வொரு மாதத்திற்கான வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 29,497,752 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 42,380,315 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரிகள் | 1.,085,000 | – | 10,330,511 | 6,639,377 | 985,100 | – | 1,078,354 | 3,341,985 |
| வாடகைகள் | 17,000,000 | – | 9,023,727 | – | 16,093,334 | – | 9,111,586 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,450,000 | – | 1,046,390 | – | 560,000 | – | 876,419 | - |
| ஏனைய வருமானம் | 21,281,500 | – | 29,713,454 | 44,416,805 | 20,352,000 | – | 24,993,714 | 41,792,628 |
| | **40,816,500** | _ | **50,114,082** | **51,056,182** | **37,990,434** | _ | **36,060,073** | **45,134,613** |

### 2.2.2 வீதவரிகள்

-------------

வீதவரி நிலுவைகள் கூட்டு மொத்தம் ரூபா 5,911,223 அறவிடப்பட்டிருக்க கடந்த 01 தொடக்கம் 10 வருடங்களாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

-----------------------------------------------------------------

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 732,767 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 10,783,426 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------

### 3.1 செயலாற்றல்

---------------

நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச்சுகாதாரம், பொதுப்பயன்பாட்டுச்சேவைகள் மற்றும் பொதுவழிகள் மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரியின் பாதுகாப்பு மற்றும் மேம்படுத்தலுடன் தொடர்புடையதாகவுள்ள அனைத்து விடையங்களினதும் கட்டுப்பாடு மற்றும் நிர்வாகத்தில் சபை தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு உள்ளன.

**(அ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

------------------------------------

திண்மக் கழிவுகள் குவிக்கப்படும் இடத்தில் தரம் பிரிக்கப்பட்டிராது சேகரிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்**

---------------------------------

மீளாய்வாண்டில் சபை நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 4,768,900 இற்கு மதிப்பிடப்பட்ட மூன்று வீதி அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தன.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-------------------------------------------

ரூபா 270,900 கிரயத்தில் புலோலி கமநல சேவைகள் நிலையத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட உழவு இயந்திரத்தின் உரிமைமாற்றமானது கடந்த 12 ஆண்டுகளாக சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

----------------------------------------

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 15 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------

நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த 13 கடைகள் கடந்த நான்கு ஆண்டுகளாக வாடகைக்கு வழங்கப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

சபையினது கழிவுறுஞ்சியினைப் பயன்படுத்தி கழிவு நீரகற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராது தனியாரொருவரிடம் வாடகைக்கு பெற்றிருந்தமைக்காக கூட்டுமொத்தம் ரூபா 6,117,905 செலுத்தப்பட்டிருந்தது.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

இரண்டு சில்லு உழவு இயந்திரமொன்று கடந்த 5 வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்க சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்

முன்னைய களஞ்சிய காப்பாளரினால் சபைக்கு கையளிக்கப்பட்டிராத ரூபா 1,217,769 பெறுமதியான இரு இயந்திரங்கள் தொடர்பில் கடந்த 05 ஆண்டுகளாக சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

#### பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 132,945 தொடக்கம் ரூபா 10,189,498 அல்லது 12 சதவீதம் தொடக்கம் 59 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 80,172 தொடக்கம் ரூபா 8,442,928 அல்லது 17 சதவீதம் தொடக்கம் 42 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| **முறைமைகள்** | **குறைபாடுகள்** |
|---|---|
| கணக்கீடு | செயற்பாட்டுத்திட்டம்,அளவுத்தாள் பதிவேடு, காணி விற்பனை வரிப் பதிவேடு, இழப்பீட்டுப்பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |